# வாய்வழி ஆன்டிவைரல்கள் என்றால் என்ன?

## கோவிட்-19 ஆல் பாதிக்கப்பட்ட ஒருவர் மீண்டுவர உதவும் மாத்திரைகள்

தீவிர கோவிட்-19 ஏற்படும் அபாயத்தில் நீங்கள் இருந்து கடந்த 5 நாட்களுக்குள் கோவிட்-19 க்கு நெகட்டிவாகப் பரிசோதனை செய்யப்பட்டிருந்தால், நீங்கள் பரிந்துரைக்கப்பட்ட வாய்வழி ஆன்டிவைரல் மாத்திரைகள் எடுத்துக்கொள்வதைப் பரிசீலிக்க வேண்டியிருக்கலாம். இரண்டு சிகிச்சை முறைகள் கிடைக்கின்றன: Paxlovid™ (Pfizer) மற்றும் legevirio (Merck). உங்கள் வயது, மருத்துவ வரலாறு மற்றும் உங்களுக்கு எத்தனை நாட்களாக அறிகுறிகள் இருக்கின்றன என்பதைப் பொறுத்து நீங்கள் இந்த கோவிட்-19 சிகிச்சை முறைகளில் ஒன்றிற்குத் தகுதி பெறலாம்.

வாய்வழி ஆன்டிவைரல் சிகிச்சையானது உங்கள் உடலில் SARS-CoV-2 வைரஸ் (கோவிட்-19 ஐ ஏற்படுத்தும் வைரஸ்) இனபெருக்கம் செய்வதை நிறுத்தி, உங்கள் உடலில் இருக்கும் வைரஸின் அளவைக் குறைத்து அல்லது உங்கள் நோயெதிர்ப்பு சக்திக்கு உதவி புரிந்து கோவிட்-19 க்கு எதிராக உங்கள் உடல் போராடுவதற்கு உதவும். சிகிச்சை பெறுவதன் மூலம், நீங்கள் தீவிரம் குறைந்த அறிகுறிகளைப் பெறலாம் மற்றும் உங்கள் நோய் தீவிரமடைவதைத் தடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நிலையைத் தடுக்கலாம்.

---

### • வாய்வழி ஆன்டிவைரலை நான் எப்படி எடுத்துக்கொள்ளுவது?

வாய்வழி ஆன்டிவைரல் சிகிச்சையைப் பெறுவது என்பது நீங்கள் மாத்திரைகள் எடுத்துக்கொள்வது ஆகும். உங்கள் சுகாதார வழங்குநர் பரிந்துரைத்தபடி நீங்கள் வாய்வழி ஆன்டிவைரல் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். டோஸ் எடுக்க மறக்கவேண்டாம் அல்லது அப்படி மறந்தாலும் கூடுதல் டோஸ்கள் எடுக்க வேண்டாம். குறிப்பிட்டுள்ளபடி சிகிச்சை முடியும் வரை அல்லது உங்கள் சுகாதார வழங்குநர் நிறுத்தச் சொல்லும் வரை நீங்கள் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். வாய்வழி ஆன்டிவைரல்களை உணவுடனோ அல்லது உணவு இல்லாமலோ எடுத்துக்கொள்ளலாம். மாத்திரைகளை உடைக்காமல் அல்லது பொடியாக்காமல் முழுதாக விழுங்குவதுப் பரிந்துரைக்கப்படுகிறது.

### • எனக்கு சிறுநீரகம் அல்லது கல்லீரல் பிரச்சனை போன்ற உடல்நிலை இருந்தால் என்ன செய்வது?

எந்த மருந்தும் எடுப்பதற்கு முன்னர் உங்கள் மருத்துவ வரலாறு குறித்து உங்கள் சுகாதார வழங்குநரிடம் ஆலோசிக்க வேண்டும். அதில் உங்களுக்கு ஏற்கனவே இருக்கும் மருத்துவ நிலைகள் மற்றும் அதற்குப் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள், ஓவர் தி கவுண்டர் மருந்துகள், நீங்கள் எடுத்துக்கொள்ளும் வைட்டமின்கள் மற்றும் சப்ளிமென்ட்டுகள் பற்றி கூறுவதும் அடங்கும்.

வாய்வழி ஆன்டிவைரல் மருந்து எடுத்துகொள்ளும்முன் சிறுநீரகம் அல்லது கல்லீரல் பிரச்சனைகள் கொண்டவர்கள் தங்கள் உடல்நிலை குறித்து தங்கள் சுகாதார வழங்குநரிடம் பேச வேண்டும். வாய்வழி ஆன்டிவைரல் சிகிச்சை உங்களுக்கு சரியானதா மற்றும் உங்களுக்கு வழங்கப்படும் டோஸ் பொருத்தமானதா என்று உங்கள் சுகாதார வழங்குநர் முடிவு செய்வார். சில குறிப்பிட்ட உடல்நிலை கொண்ட நபர்களுக்கு சில சிகிச்சைமுறைகள் பரிந்துரைக்கப்படாமல் இருக்கலாம்.

- ## வாய்வழி ஆன்டிவைரல் சிகிச்சைக்கு நான் தகுதி பெறாவிட்டால் என்ன செய்வது?

வாய்வழி ஆன்டிவைரல் சிகிச்சைக்கு நீங்கள் தகுதி பெறவில்லை அல்லது அது உங்களுக்கு சரியானது அல்ல என்று உங்கள் சுகாதார வழங்குநர் முடிவு செய்யலாம். அதற்குப் பல காரணங்கள் இருக்கக்கூடும். அனைத்து நிபந்தனைகளுக்கும் நீங்கள் தகுதி பெற்றிருக்க மாட்டீர்கள், அல்லது சில சிகிச்சை முறைகளுக்குப் பொருந்தாத உடல்நிலை உங்களுக்கு இருக்கலாம். உங்களுக்கான சிறந்த சிகிச்சை முறை பற்றி உங்கள் சுகாதார வழங்குநரிடம் ஆலோசியுங்கள்.

DOH 825-029 May 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது mailto:ecivil.rights@doh.wa.gov ற்கு மின்னஞ்சல் செய்யவும்.